

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை, நேற்று மாலை, முகாம் அலுவலகத்தில் கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் சந்தித்து, முதல்வருக்குப் பொன்னாடை அணிவித்து பிறந்தநாள் வாழ்த்துத் தெரிவித்தார்.



தமிழ்நாட்டிற்கு வருகை தந்த பிரதமர் நரேந்திர மோடி அவர்களை நேற்று (28.2.2026) சென்னை விமான நிலையத்தில், நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு பொன்னாடை அணிவித்து வரவேற்றார். உடன் ஒன்றிய தகவல் மற்றும் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் எல். முருகன் உள்ளார்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.2.2026) தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட காக்ஸ் குடியிருப்பு திட்டப்பகுதியில் 6 தளங்களுடன் 14.20 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 78 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து, குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், வட்டார துணை ஆணையர் திரு. கட்டா ரவி தேஜா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ந.பிரியா ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் ரா.ஜெகதீசன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.2.2026) தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட நாவலர் நெடுஞ்செழியன் நகர் சிந்தாதரிப்பேட்டை திட்டப்பகுதியில் 6 தளங்களுடன் 77.05 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 450 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்து, குடியிருப்புதாரர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கினார். உடன் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திருமதி ஸ்ரேயா பி.சிங், பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன். வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் திருமதி ந.பிரியா ரவிச்சந்திரன், மாமன்ற உறுப்பினர் ரா.ஜெகதீசன் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.2.2026) சென்னை நுங்கம்பாக்கத்தில் தமிழ்நாடு மாநில திட்டக்குழுவால் நிறுவப்பட்டுள்ள தமிழ்நாடு கொள்கை மற்றும் ஆளுகை அனுபவக் கற்றல் மையத்தினை (TNPAGE) திறந்து வைத்தார். இந்நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர் மரு. நா.எழிலன், மாநில திட்டக்குழுவின் செயல் துணைத்தலைவர் முனைவர் ஜெ. ஜெயரஞ்சன், பெருநகர சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ்குமார், மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை செயலாளர் சஜ்ஜன்சிங் ஆர் சவான், நிலைக்குழுத் தலைவர் (பணிகள்) நே.சிற்றரசு, மாநில திட்டக் குழுவின் உறுப்பினர் செயலர் (மு.கூ.பொ) திருமதி. எஸ்.சுதா, அரசு உயர் அலுவலர்கள் மற்றும் மாநில திட்டக்குழு உறுப்பினர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.2.2026) மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் 32.32 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சென்னை, சேப்பாக்கம் சமூக மகப்பேறியல் நிலையம் மற்றும் அரசு கஸ்தூரிபா காந்தி தாய்சேய் நல மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள கூடுதல் கட்டடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மண்டலக்குழுத் தலைவர் எஸ்.மதன்மோகன், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் மரு.சுகந்தி இராஜகுமாரி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர்கள் மரு.சாந்தாராமன், மரு.ஹரிஹரன், சமூக மகப்பேறியியல் நிலையம் மற்றும் அரசு கஸ்தூரிபா காந்தி தாய் சேய் நல மருத்துவமனை இயக்குநர் மரு.என்.கே.மகாலட்சுமி உள்பட மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் தாய்மார்கள் உடனிருந்தனர்.

# கோயம்புத்தூரில் - ரூ.300 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் - தந்தை பெரியார் நூலகம் - அறிவியல் மையக் கட்டுமானப் பணிகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் நேரில் பார்வையிட்டு ஆய்வு!

சென்னை, மார்ச் 1-

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 27.2.2026 அன்று கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமத்தில் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுவரும் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையக் கட்டுமானப் பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

தமிழ்நாடு அரசின் 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில், கோவை வாழ் பொதுமக்களிடையே, குறிப்பாக இளைய தலைமுறையினரின் அறிவுதாகத்தை மேலும் தூண்டும் விதமாக ஒரு மாபெரும் நூலகம் மற்றும் அறிவியல் மையம் கோயம்புத்தூரில் அமைக்கப்படும் என்றும், இதில் உலகத்தரம் வாய்ந்த நூல்கள், பத்திரிகைகள், இதழ்கள் மற்றும் இணைய வளங்களும் இடம்பெறுவது மட்டுமின்றி, விண்வெளி, எந்திரவியல், மெய்நிகர் தோற்றம், இயற்கை அறிவியல் என பல்வேறு அறிவியல் மற்றும் பொறியியல் பிரிவுகளைச் சார்ந்த வசதிகள் ஏற்படுத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, கோவை மத்திய சிறைச்சாலைக்கு சொந்தமான 6 ஏக்கர் 98 சென்ட் நிலத்தில் (கோவை வடக்கு, அனுப்பர்பாளையம் கிராமம்) 1.98 இலட்சம் சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் ஏழு தளங்களுடன் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையத்திற்கு முதலமைச்சர் அவர்கள் 6.11.2024 அன்று அடிக்கல் நாட்டினார்.

இந்த மையத்தின், தரைத்தளத்தில், கலையரங்கம், மாற்றுத்திறனாளிகளுக்கான நூலகம் மற்றும் விண்வெளிப் பயணத் தூக்கி, முதல் தளத்தில் வரவேற்பறை, அறிவியல் மையம், இரண்டாம் தளத்தில் குழந்தைகளுக்கான நூலகம் மற்றும் சொந்த புத்தகம் படிக்கும் பிரிவு, மூன்றாம் தளத்தில் போட்டி தேர்வுகளுக்கான நூலகம் மற்றும் தலைமை நூலகர் அலுவலகம், நான்காம் தளத்தில் தமிழ் புத்தகப் பிரிவு மற்றும் பருவ இதழ்கள் பிரிவு, ஐந்தாம் தளத்தில் ஆங்கில புத்தகப் பிரிவு மற்றும் இன்குபேஷன் சென்டர், ஆறாம் தளத்தில் ஆங்கில புத்தகப்பிரிவு மற்றும் இன்குபேஷன் சென்டர், ஏழாம் தளத்தில் அறிவியல் மையம் மற்றும் டிஜிட்டல் நூலகம் ஆகியவை அமைக்கப்படவுள்ளன. இம்மையத்தில் மொத்தம் 1,25,000 புத்தகங்கள் மாணவ மாணவிகளின் நலனுக்காக வைக்கப்பட உள்ளது.

இந்த மையத்தின் கட்டுமானப் பணிகளை முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், அங்கு வைக்கப்பட்டுள்ள மையத்தின் மாதிரி வடிவமைப்பு, கட்டுமானப் பணிகள் குறித்த புகைப்படங்கள், புத்தகங்கள் போன்றவற்றையும் பார்வையிட்டு, மையத்தின் கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈஸ்வரசாமி, கே.இ.பிரகாஷ், முன்னாள் அமைச்சர் சட்டமன்ற உறுப்பினர்

வி.செந்தில்பாலாஜி, கோயம்புத்தூர் மாநகராட்சி மேயர் திருமதி. ரங்கநாயகி, துணை மேயர் இரா. வெற்றிசெல்வன், பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ) திருமதி ச.ஜெயந்தி, கோயம்புத்தூர் மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார், க.கிரியப்பனவர், மாநகராட்சி ஆணையர் மா.சிவகுரு பிரபாகரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



உத்திரமேரூர் சட்டமன்ற தொகுதி காஞ்சிபுரம் ஊராட்சி ஒன்றியம் ஒன்றிய குழு பெருந்தலைவர் திருமதி. மலர்கொடி குமார் தலைமையில் தம்மனூர். ஊராட்சியில் அங்கன்வாடி மையம் அவளூர். ஊராட்சியில் பயணியர் நிழற்குடை ஆகியவற்றை மாவட்ட கழக செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ., திறந்து வைத்தார். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் க.செல்வம், ஒன்றிய செயலாளர் க.குமணன், ஒன்றிய குழு உறுப்பினர் திருமதி.சங்கரி குமார், ஊராட்சி மன்ற தலைவர்கள் டி.எல்.தயாளன், திருமதி சித்ரா பாபு மற்றும் தம்மனூர் கெங்கன் உள்ளிட்ட ஒன்றிய கழக நிர்வாகிகள் முன்னாள், இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.


## பேர் சொல்லும் பிள்ளை!



“வெல்வீர்
ஒன்றாக
வீடும் நாடும்
நன்றாக
இனமும் மொழியும்
வென்றாக
எல்லார்க்கும் எல்லாம்
உண்டாக

வெற்றியை நோக்கி
நீங்களும்
உங்களை நோக்கி
வெற்றியும்

பேர்சொல்லும் பிள்ளையென்று
ஊர்சொல்லும் வார்த்தைகண்டு
கண்ணாடி உயர்த்திக்
கண்ணீர் துடைக்கிறார் கலைஞர்”



**கவிப்பேரரசு**
**வைரமுத்து**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வாழ்த்துக்களுடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி மகளிர் தினத்தையொட்டி கழக தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் கார்த்திக் மோகன் ஏற்பாட்டில், அண்ணாநகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மகளிரை ஊக்குவிக்கும் விதமாக மகளிர் தின கொண்டாட்டத்தில் பல்வறு நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட மகளிருக்கு கழக துணைப் பொதுச் செயலாளர், கனிமொழி கருணாநிதி எம்.பி. பரிசுகளை வழங்கினார். இதில் சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே. சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர் எம்.கே.மோகன், பகுதிச் செயலாளர் ச.பரமசிவம், சென்னைப் பெருநகர மாநகராட்சி ஆளுங்கட்சித் தலைவர், தெற்குப் பகுதிச் செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி., ‘குக் வித் கோமாளி’ கனி திரு, ஸ்ருதி கார்த்திக் ஆகியோர் பங்கேற்றனர்.